<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | : | 17,18,19,20,21,22,23,24,25,26,27/ 2024 | சாட்சியம் | : | **MW1** |
| **Name** | : | திரு.சக்திவேல் | | | |
| **Date** | : | **08.01.2026** | | | |
| **Time** | : | **12.56 p.m to 1.35 p.m** | | | |

<u>நி.த.சா.**1**.திரு.சக்திவேல் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை</u>

எதிர்மனுதாரர் கம்பெனி கம்பெனி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது என்றால் ஆமாம். நான் ஜனவரி 2020 இல் வேலைக்கு சேர்ந்தேன். மனுதாரர் டிசம்பர் 2022 இல் பணிநீக்கம் செய்யப்பட்டபோது நான் HR-ஆக இருந்தேன். கொரோனா காலகட்டத்திற்கு பின்னர் உற்பத்தி குறைந்தது என காட்ட ஆதாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 2020-க்கு பின்னர் கம்பெனியின் நிதி நிலை மோசமாக உள்ளது என்பதற்கு ஆதாரம் தாக்கல் செய்யவில்லை. நி.சா.ஆ.**2** சுற்றறிக்கையில் அது தெரிவிக்கப்பட்ட தேதி மற்றும் நீக்கப்பட்ட தேதி குறிப்பிடப்பட்டுள்ளது அது போன்று எல்லா சுற்றி அறிக்கையிலும் நிர்வாக தரப்பில் தெரிவிக்கப்படுமா என்றால் இல்லை முக்கியமான சுற்றறிக்கை மட்டும்

அவ்வாறு தெரிவிக்கப்படும். நி.சா.ஆ.**2,3** சுற்று அறிக்கையில் ஒட்டப்பட்டதேதி மற்றும் நீக்கப்பட்ட தேதி சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். தொழிலாளர்களை பணி நீக்கம் செய்வதற்கு முன்னர் சுற்றறிக்கை எதுவும் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை பணிமூப்பு பட்டியல் மட்டும் ஒட்டப்பட்டது (நி.சா.ஆ.11). மேற்படி ஆவணம் எந்த தேதியில் ஒட்டப்பட்டது என்பதற்கான குறிப்பு இல்லை என்றால் ஆமாம். அறிவிப்பு பலகையில் ஒட்டப்பட்டது என்பதற்கான ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். நி.சா.ஆ.**15** ஆட்குறைப்பு அறிவிப்பில் பணி மூப்பு பட்டியல் ஒட்டப்பட்டதற்கான குறிப்பு எதுவும் இல்லை என்றால் ஆமாம். 5.12.2022 தேதியிட்ட பணி மூப்பு பட்டியல் தொழிலாளர்களுக்கு நிர்வாக தரப்பில் உரிய முறையில் தெரிவிக்கப்படவில்லை என்றாலும் அதனை தெரிவிக்காமலேயே நிர்வாகம் ஆட்குறைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டது என்றாலும் தவறு. கொரோனா காலகட்டத்திலும் கூட எங்கள் கம்பெனியில் தொடர்ச்சியாக வேலை இருந்தது என்றாலும் அவ்வாறு இருக்கும் பொழுது கொரோனா காலகட்டம் என்பதால் வேலையில்லை என தவறான சாட்சியத்தை அளிக்கிறேன் என்றாலும் சரி அல்ல. 2020ல் இருந்து 2022 வரை காலகட்டதில் தொழிலாளர்கள் தொடர்ச்சியாக வேலை இருந்த காரணத்தினால் கம்பெனியில் வேலை செய்து வந்தார்கள் என்றால் ஆமாம். இரண்டு ஷிப்டிலும் தொழிலாளர்கள் வேலை செய்து வந்தார்கள் என்றால்

சில நாட்கள் இரண்டு ஷிப்ட் வேலை பார்ப்பார்கள் சில நாட்கள் ஜெனரல் ஷிப்டில் வேலை பார்ப்பார்கள். மொத்தம் பதினோரு தொழிலாளர்கள் இந்த நீதிமன்றத்தில் தொழிற்தாவா எழுப்பி உள்ளார்கள் என்றால் ஆமாம். 11 பேரும் உற்பத்தி பிரிவில் வேலை செய்தார்கள் என்றால் இல்லை வேறு வேறு பிரிவில் வேலை செய்தார்கள். தொ.சா.ஆ.2 மனுதாரரின் சம்பள ரசீது என்றால் ஆமாம். அதில் மனுதரார் உற்பத்தி பரிவில் வெல்டராக வேலை செய்ததாக கண்டுள்ளது என்றால் ஆமாம். நி.சா.ஆ.15 ஆவணத்தில் கண்டுள்ள 1-15 வரையிலான தொழிலாளர்கள் அனைவரும் உற்பத்தி துறையில் வேலை செய்ததாக கண்டுள்ளது என்றால் ஆமாம். ஆனால் வேறு வேறு பிரிவில் வேலை செய்தார்கள். மனுதாரரை வெல்டர் கார்பன் ஸ்டீல் பிரிவில் வேலையில் அமர்த்தியதாக நியமன அணை வழங்கப்பட்டதா என்றால் இல்லை வெல்டர் என நியமனம் செய்து உத்தரவு வழங்கப்பட்டது. அவர்களின் திறமைக்கு ஏற்றவாறு ஒவ்வொரு பிரிவிலும் வெல்டராக நியமிப்போம். சம்பள ரசீதில் வெல்டர் என மட்டும் தான் சொல்லப்பட்டுள்ளது கார்பன் ஸ்டீல் வெல்டர் என குறிப்பிட்டு சொல்லப்படமாட்டாது. ஆட்குறைப்பு அறிவிப்பில் வரிசை எண் 1 - 15 கண்டுள்ள உற்பத்தி துறை தொழிலாளர்களுக்கு என தனியாக பணி மூப்பு பட்டியல் வெளியிடப்பட்டதா என்றால் இல்லை அனைத்து தொழிலாளர்களுக்கும் சேர்த்து பொதுவானது தான் வெளியிடப்பட்டது. வெல்டர்களுக்கு தனியாக பொதுவான பணி மூப்பு

பட்டியல் வெளியிடப்படவில்லை என்றால் அது போன்று எங்கள் கம்பெனியில் பராமரிக்கப்படுவது இல்லை. எங்கள் கம்பெனி சார்பாக வெல்டர் கார்பன் ஸ்டீல், வெல்டர் அலுமினியம், வெல்டர் பிட்டர் என தெரிவித்து பணி நியமன ஆணை வழங்கவில்லை என்றால் வெல்டர் என பொதுவாக தான் பணி நியமன ஆணை வழங்கப்படும். உற்பத்தி துறையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு தனியாக பணி மூப்பு பட்டியல் தயார் செய்து அதன் முன்னிலைக்கு கடைசியாக வந்த தொழிலாளியை தான் ஆட்குறைப்பு செய்ய வேண்டும் என்றால் அதுபோன்று செய்ய வேண்டியது இல்லை எங்கள் கம்பெனியை பொறுத்தவரையில் எல்லா துறைகளிலும் சேர்த்து தொழிலாளர்களுக்கு பொதுவான பணி மூப்பு பட்டியல் தயாரிக்கப்பட்டு அதன் முன்னிலையில் தான் ஆட்குறைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எல்லா துறைகளுக்கும் சேர்த்து பொதுவான பணி மூப்பு பட்டியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அது நி.சா.ஆ.11 ஆகும். தொழிலாளர்களை முறையற்ற முறையில் வகைப்பாடு செய்து ஆட்குறைப்பு செய்துள்ளது சட்டப்படி தவறானது என்றால் சரியல்ல. தொழிலாளர்கள் வெல்டிங் பிரிவில் மோசமான நிலையில் வேலை பார்த்தார்கள் என்று சொல்வதற்கு ஆதாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் வாடிக்கையாளர்களில் புகாரியின் அடிப்படையில் அவ்வாறு தெரிவிக்கப்பட்டது. வாடிக்கையாளர்களில் புகார் நகல் தாக்கல்

செய்யப்படவில்லை. வெல்டிங் வேலையை சரியாக செய்யவில்லை என குற்றச்சாட்டு குறிப்பாணை எதுவும் வழங்கப்பட்டது என்றால் இல்லை. மனுதாரர் உட்பட அனைத்து தொழிலாளர்களும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வேலையை முறையாக செய்து வந்தார்கள் என்றாலும் அவர்கள் மீது பொய்யான குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது என்றாலும் சரியல்ல. நிர்வாகத்திற்கு 15 கோடி வரை நஷ்டம் ஏற்பட்டது என சொல்வதற்கு ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். கம்பெனியில் வேலை இல்லாத காரணத்தினால் தொழிலாளர்கள் அனைவரும் வேலை செய்யாமல் சும்மா உட்கார்ந்து இருந்தார்கள் என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. உற்பத்தி இல்லாமல் இருந்த நாட்கள் இருந்தது என சொல்வது பொய் என்றாலும் தினசரி வேலை செய்து அதற்கான ஒர்க் ஷீட் வழங்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. எங்கள் கம்பெனியில் தொடர்ந்து வேலை இருக்கிறது என்றாலும் அந்த வேலையை நாங்கள் பயிற்சி தொழிலாளர்கள் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள் மூலம் செய்து கொண்டு நிரந்தர தொழிலாளர்களை முறையற்ற வகையில் பணிநீக்கம் செய்துள்ளோம் என்றால் தவறு. தற்போது வரை நிர்வாகம் லாபம் ஈட்டி நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது என்றாலும் அவ்வாறு இருக்கும் பொழுது நஷ்டத்தில் இயங்கி வருவதாக பொய்யான தகவலை தெரிவிக்கிறேன் என்றாலும் சரியில்லை. இன்றைய தேதியில் எத்தனை நிரந்தர

தொழிலாளர்கள் வேலை பார்க்கிறார்கள் பயிற்சி தொழிலாளர்கள் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்பதற்கு ஆதாரம் தாக்கல் செய்யவில்லை ஆனால் மொத்தம் 30 தொழிலாளர்கள் வேலை பார்க்கிறார்கள். அதில் நிர்வாக தரப்பு ஊழியர்களும் அடங்குவார்கள்.

தொடர்ச்சி வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by him to be correct.

S SUJATHA

Digitally signed by S SUJATHA
Date: 2026.01.08 18:13:39 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:08.01.2026